**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.திருவேங்கிடம், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.திருவேங்கிடம், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.கோவிந்தராஜ் |
| கிராமம் | - அழிவிடைதாங்கி |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

16.08.2023

பி.வா.சா.1.

நான் இவ்வழக்கில் 7ம் பிரதிவாதி. 1, 4 முதல் 6 வரையான பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். 5.12.2013 தேதியிட்ட எனது கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். (**5.12.2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் பி.வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தாவா சொத்திற்கான பி-அட்டவணை சொத்து 8-வது அயிட்ட சொத்தில் நான் கிரையம் பெற்றுள்ளேன் அதற்கான என் பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்துள்ளேன். ( **7ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.8714 கணினி நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது பிரமாணத்தை ஏற்று வாதியின் தாவாவை தள்ளுபடி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

**வாதி மற்றும் 11, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**